[9th November 1966

இப்போதுள்ள முறையில் ஆரம்பித்துவிட்டால் போகப்போக விரிவுபடுத்திக்கொள்ளலாம் என்பதாகக் கருதப்பட்டது. அரசாங்கத்தின் முடிவு வறண்டு போய் இருக்கிற நிலங்களுக்கு அதிகமாகத் தண்ணீர் கொடுக்கக் கூடிய முறையில் இந்தத் திட்டம் அமைக்கப்படவேண்டும் என்பதாகும்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : அரசாங்கம் கொடுத்திருக்கக் கூடிய தகவல்களில் இருந்தே எத்தனையோ கோடி க்யூசெக்ஸ் தண்ணீர் வீணாகக் கடலில் போய்க் கலக்கின்ற நிலைமை இருப்பதைப் பார்க்கிறோம். திருச்செந்தூர் தாலுக்கா வறண்ட பகுதி, சடையனேரி, நொச்சிக் குளம் போன்ற இடங்களுக்குத் தண்ணீர் கொடுக்க இந்தத் திட்டத்தின் கீழ் வகை இருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்த மாதிரி பரிசீலனை செய்ததாக ஞாபகம் எனக்கில்லை.

தண்ணீர்த் தீர்வை

* 561 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கார்காலத்திலும், அட்வான்ஸ் கார்காலத்திலும் நஞ்சைப் பயிர் செய்யப்படும் புஞ்சை நிலங்களுக்கு விதிக்கப்படும் தண்ணீர் தீர்வையின் 'ரேட்' என்ன ?

(இ) பிசானகாலத்தில் நஞ்சைப் பயிர் செய்யப்படும் புஞ்சை நிலங்களுக்கு விதிக்கப்படும் தண்ணீர் தீர்வையின் 'ரேட்' என்ன.

(உ) இவைகளுக்குள் வித்தியாசமிருப்பின், அதற்கான காரணமென்ன ?

(எ) இதனைப் போக்கவேண்டுமென்று கோரி திருச்செந்தூர் தொகுதி சட்டசபை உறுப்பினரிடமிருந்து 1963, 1964, 1965 வருடங்களில் முறையீடுகள் வந்துள்ளனவா ?

(ஐ) ஆம் எனில், அவைகளின்மீது எடுத்துள்ள நடவடிக்கை யாது?

THE HON. SRI V. RAMIAH : (a) to (c) A statement [a] is placed on the Table of the House.

திரு. எம். எஸ். செல்வராஜன் : அரசாங்கம் கொடுத்திருக்கக் கூடிய தகவல்களில் இருந்து மழை காலத்தில் புஞ்சையை நஞ்சையாகச் சாகுபடி செய்தாலும், ஒரு போகத்தை இரண்டு போகமாகச் சாகுபடி செய்தாலும் சாதாரணத் தண்ணீர்த் தீர்வையைவிட இரண்டு பங்கு, மூன்று பங்கு தீர்வை விதிக்கப் படுகிறது. முன்பு கேட்கப்பட்ட கேள்விக்கு எத்தனையோ கோடி க்யூசெக்ஸ் தண்ணீர் இன்றையதினம் வீணாகக் கடலில் போய்க் கலக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே தண்ணீரை உபயோகப்படுத்திக் கொள்ளாமல் இருக்க வழியில்லை என்கிற

[a] Printed as Appendix VIII on pages 906–908.

9th November 1966]

நிலையில் நஞ்சையாக்கினால், இரண்டு போகமாக்கினால் தீர்வை இரண்டு பங்கு. மூன்று பங்கு போடப்படுவது நியாயமா? இதை மறுபரிசிலனை செய்வார்களா என்று அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா: கனம் அங்கத்தினருக்கு விவசாயத்தைப்பற்றித் தெரியும் என்று நினைக்கிறேன். மழை காலங்களில் ஐந்நூறு நாட்கள்தான் அதிகமாகத் தண்ணீர் போகும். அதை வைத்துக்கொண்டு வருஷத்தில் 6 மாதம், 9 மாதம் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்பது சரியாகாது. மற்ற விவசாயிகள் பாதிக்கப்படாதிருக்கத்தான் இந்த முறை.

மண்ணெண்ணெய்

* 562 கேள்வி.—**திரு. எஸ். ஜே. ராமசாமி:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நமது மாநிலத்திற்கு 1965 எப்ரல் முதல் இன்றுவரை மத்திய அரசாங்கம் கிரோசின் & டீசல் எண்ணெய் எவ்வளவு ஒதுக்கியுள்ளது?

கனம் திரு. வெ. ராமையா: கிரோஸின்—2,75,605.3 கிலோ லிட்டர். டீசல் எண்ணெய்—2,74,535.7 கிலோ லிட்டர்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: ஒரு லிட்டர் கிரோசின் வெள்ளெண்ணெய் 50 பைசாவுக்கு விற்கப்படுகிறது. இது சர்க்கார் விதித்துள்ள ரேட்டா?

கனம் திரு. வெ. ராமையா: அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

The Cauvery Delta

* 563 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the details of the steps taken by the Government to give relief to the ryots affected by the scarcity of water in the Cauvery delta; and

(*b*) the causes for the precariously low level of water reached of Mettur Dam during the year 1965?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) & (*b*) A statement [a] is placed on the Table of the House.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, மெர்க்காராவில் மழை அளவு எப்படிப் பதிவு செய்யப்படுகிறது என்பதை கவனித்துக்கொள்ள நம் அரசாங்கச் சார்பில் எந்த அதிகாரியாவது இருந்து பரிசீலனை செய்து வருகிறார்களா?

கனம் திரு. வெ. ராமையா: எ.இ. அல்லது இ.இ. கிரேடில் போடப்பட்டு இருக்கிறது.

---

[a] Printed as Appendix IX on pages 908–916